IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

<u>SESSIONS CASE NO. 70/2020</u>

Deposition of witness for prosecution : PW9

Defense :

| | | |
|---|---|---|
| Name | : | தரணி |
| Father's Name | : | தட்சிணாமூர்த்தி |
| Village | : | அகரம் சேரி |
| Taluk | : | குடியாத்தம் |
| Caste | : | |
| Calling | : | உதவி ஆய்வாளர், ஓய்வு |
| Religion | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.02.2026.

**<u>முதல் விசாரணை</u>**

**5ம் எதிரி இறப்பு. மற்ற எதிரிகள் ஆஜர்.**

1. நான் அனைக்கட்டு காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் ஆரணி நகர காவல் நிலையத்தில் கடந்த 12.06.2017 ம் தேதி பணியில் இருந்த போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக இருந்த மணிகண்டன் என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்றேன். (அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த புகார் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் கோவிந்தசாமி பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. புகார் வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் வரிகளுக்கு இடையே இடைவெளி அதிகமாகவும் 2வது பக்கத்தில் கடைசி 8 வரிகளுக்கு இடையே நெருக்கமாக உள்ளது என்றாலும் சரிதான். வெற்று தாளில் கையொப்பம் பெற்று கொண்டு புகார் வாக்குமூலத்தை பிறகு நிரப்பியதால் தான் நெருக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.